**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

பெறுநர், தேதி: 11.09.2026
ஆசிரியர்,
ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**கேரட் நூற்புழு மேலாண்மைக்கான தாவர அடிப்படையிலான உயிரியல் நூற்புழுக்கொல்லி உருவாக்க தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் – லிங்கா கெமிக்கல்ஸ் நிறுவனம் இணைந்து செயல்படுகிறது**

நிலையான மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த பயிர் பாதுகாப்பை ஊக்குவிக்கும் முக்கிய முயற்சியாக, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மற்றும் மதுரையைச் சேர்ந்த லிங்கா கெமிக்கல்ஸ் நிறுவனம் இணைந்து, கேரட் பயிரில் வேர் முடிச்சு நூற்புழுக்களை மேலாண்மை செய்வதற்கான தாவர அடிப்படையிலான உயிரியல் நூற்புழுக்கொல்லி உருவாக்கி மதிப்பீடு செய்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.

இத்தொழில்துறை–கல்வியியல் கூட்டாண்மையின் மூலம், தாவர அத்தியாவசிய எண்ணெயை அடிப்படையாகக் கொண்ட நுண்குழம்பு உயிரியல் நூற்புழுக்கொல்லி உருவாக்கி, நூற்புழு மேலாண்மைக்கான சுற்றுச்சூழலுக்கு உகந்த மாற்றுத் தொழில்நுட்பமாக மதிப்பீடு செய்யப்பட உள்ளது. கேரட் சாகுபடியில் நிலவும் முக்கிய உற்பத்தித் தடையை எதிர்கொண்டு, விவசாயிகளுக்கு குறைந்த செலவில் பயனளிக்கும் தீர்வை உருவாக்குவதே இம்முயற்சியின் முக்கிய நோக்கமாகும்.

இந்த ஒப்பந்தம், வேளாண் பல்கலைக்கழக பதிவாளர் (பொறுப்பு) மற்றும் துணைவேந்தர் (பொறுப்பு) முனைவர் M. ரவீந்திரன், பயிர் பாதுகாப்பு மைய இயக்குநர் முனைவர் M. சாந்தி, மற்றும் தாவர நூற்புழுவியல் துறை பேராசிரியர் முனைவர் B. அனிதா ஆகியோர் முன்னிலையில் கையெழுத்தானது. லிங்கா கெமிக்கல்ஸ் நிறுவனத்தின் சார்பில் நிறுவன உரிமையாளர் திரு. P. மகாலிங்கம் மற்றும் ஆலோசகர் திரு. B. முரளிதரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த ஒப்பந்தத்தின் கீழ், "கேரட் பயிரைத் தாக்கும் வேர்–முடிச்சு நூற்புழுக்களுக்கு எதிரான, தாவர அடிப்படையிலான நூற்புழு கட்டுப்பாட்டு உயிரிப் பொருளின் உருவாக்கம் மற்றும் உயிரி–செயல்திறன் மதிப்பீடு" என்ற திட்டத்தை செயல்படுத்துவதற்காக லிங்கா கெமிக்கல்ஸ் நிறுவனம் ரூ. 6,92,070/– நிதியுதவி வழங்கியுள்ளது. இத்திட்டம் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக தாவர நூற்புழுவியல் துறை பேராசிரியர் முனைவர் N. சீனிவாசன் முதன்மை ஆய்வாளராகவும், முனைவர் S. பிரபு, இணைப் பேராசிரியர், தாவர நூற்புழுவியல் துறை மற்றும் முனைவர் சத்யா மூர்த்தி பொன், உதவிப் பேராசிரியர்,

இயற்பியல் துறை ஆகியோர் இணை ஆய்வாளர்களாகவும் செயல்படுத்தப்பட உள்ளது. முனைவர் K. தேவராஜன், நூற்புழுவியல் துறை பேராசிரிர் மற்றும் தலைவர் இத்திட்டத்தின் செயல்பாடுகளைக் கண்காணிக்கிப்பார்.

கேரட் பயிரில் வேர் முடிச்சு நூற்புழுக்கள் வேர்களில் உருமாற்றத்தை ஏற்படுத்தி, பயிரின் மகசூல் மற்றும் தரத்தைப் பாதிக்கின்றன. மேலும், நூற்புழுக்களால் பாதிக்கப்பட்ட வேர்களில் கரோட்டினாய்டு குறைவதுடன், இரண்டாம் நிலை நோய்த்தொற்றுகளுக்கு அதிக வாய்ப்பும் ஏற்படுகிறது. இதனால் கேரட் விளைபொருளின் சந்தை மதிப்பும் பாதிக்கப்படுகிறது.

இந்தக் கூட்டாண்மை, வேளாண் பல்கலைக்கழக அறிவியல் மற்றும் ஆராய்ச்சி திறனையும், லிங்கா கெமிக்கல்ஸ் நிறுவனத்தின் தொழில்துறை திறனையும் ஒருங்கிணைத்து, நடைமுறைக்கு ஏற்ற தாவர அடிப்படையிலான நூற்புழு மேலாண்மை தொழில்நுட்பத்தை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. உருவாக்கப்படவுள்ள உயிரியல் நூற்புழுக்கொல்லி, கேரட் சாகுபடியில் வேர் முடிச்சு நூற்புழுக்களை மேலாண்மை செய்வதற்கான குறைந்த செலவிலான, சுற்றுச்சூழலுக்கு உகந்த மற்றும் விவசாயிகளுக்கு பயனளிக்கும் அணுகுமுறையாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த முயற்சி, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக ஆராய்ச்சிகளை தொழில்துறை பயன்பாட்டிற்கான வேளாண் தொழில்நுட்பங்களாக மாற்றுவதற்கும், விவசாயிகள் எதிர்கொள்ளும் புதிய பயிர் பாதுகாப்புச் சவால்களுக்கு தீர்வு காண்பதற்கான பல்கலைக்கழகம்–தொழில்துறை கூட்டாண்மையை வலுப்படுத்துவதற்கும் ஒரு முக்கியமான முன்னெடுப்பாக அமைகிறது.

***மக்கள் தொடர்பு அலுவலர்***